
# Flute & Mridanga Arangetram

# Aravindhan Baheerathan

DISCIPLE OF
MR. P. KIRUPAKARAN (MRIDANGAM)
MR. P. GNANAVARATHAN (FLUTE)



அரவிந்தன் பகீரதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

The Beck Theatre, 9th October 2004

# ஒளிர்க எதிர்காலம்

**K. Rajaram, B.A.,**
Former M.P., Former Minister
Former Speaker
Tamil Nadu

Chennai - 600 018

எனது அருமை நண்பர், இலங்கைத் தமிழர் தலைவர் உயர்திரு. அமிர்தலிங்கம் அவர்களின் பேரனும், திரு. பகீரதன், திருமதி. மலர்விழி ஆகியோரின் அருந்தவப் புதல்வனுமான சிரஞ்சீவி அரவிந்தனின் வேய்ங்குழல், மிருதங்கம் இங்கிலாந்தில் உள்ள பெக் தியேட்டரில், 9.10.2004 சனிக்கிழமை நடைபெறப்போவதை அறிந்து மட்டற்ற மகிழ்ச்சி. ஒரு மருத்துவர் வீட்டுக் குழந்தை, இசையில் அதுவும் பக்கவாத்திய இசையில் பெயர் பெற்று, முன்னணிக்கு வந்திருப்பது அனைவருக்கும் வியப்பளிக்கும் சேதி.

ஆனால், இளைஞன் அரவிந்தனது குருதியிலேயே தமிழ் இரண்டறக் கலந்துள்ளது. மறைந்த அவரது பாட்டனார், திரு. அமிர்தலிங்கம் அவர்கள் தமிழிலே கடல் போன்ற அறிவைப் பெற்றவர். அவரது பாட்டியார் திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் அவர்களோ, பாட்டு, பேச்சு இரண்டிலும் வல்லவர். இலங்கையில் தமிழர்களுக்கு இழைத்த கொடுமைகளைப்பற்றி அவர்கள் பேசினால், அழாதவர் யாருமே இருக்கமுடியாது. எனவே தமிழில் ஒரு பழமொழி சொல்வார்கள், அதாவது 'கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும்' என்பார்கள். அதற்கு இலக்கணம் வகுப்பதைப்போல், இளைஞன் அரவிந்தனின் வாழ்வு அமைந்துள்ளது. தமிழ் என்றாலே, இயல், இசை, நாடகம் என மூன்றும் சேர்ந்ததுதானே!

இதோ நம் அரவிந்தன், வாத்திய இசையில் தன் புலமையைக் காட்டியுள்ளான். வேய்ங்குழல் வேறு, மிருதங்கம் வேறு. இதுவல்லாமல் ஆங்கில வாத்யங்களிலும் பயிற்சி பெற்றுள்ளதாக அறிகின்றேன். இன்று தமிழகத்தில், புகழ்பெற்று, சினிமா வானில் இசை அமைப்பாளர்களாகத் திகழும் மெல்லிசை மன்னர் திரு. **M. S.** விசுவநாதனும், இசைஞானி இளையராஜாவும், மெல்லிசை சக்ரவர்த்தியாக விளங்கும் ரகுமானும் நமது அரவிந்தனைப்போன்றுதான் இசை வாழ்க்கையைத் தொடங்கியவர்கள். எனவே திரு. அரவிந்தனுக்கு இந்த வாத்தியங்களில் ஈடுபாடு உள்ளபோது, தனது படிப்புடன் இதையும் தொடரவேண்டுமென உளமார வாழ்த்துகிறேன்.

நாம் ஒன்றைப் புரிந்துகொள்ளவேண்டும். வாத்யக் கருவிகள் நமக்கு வாசிக்க வருவது, இறைவன் கொடுத்த வரம்தான். அதிலும் அரவிந்தன் இங்கிலாந்தில் உள்ளவன். திறமை இருக்கிறது. விரல்கள் பேசுகின்றன. வாய்வழி விடும் மூச்சுக் காற்று வேய்ங்குழலில், இசையைக் கொடுக்கிறது. 'பாடப் பாட ராகம்' என்பது பழமொழி. அதுபோல் இந்த வாத்தியங்களை வாசிக்க வேண்டும் என்றால், இசை ஞானம் இல்லாமல் முடியாது. இளைஞன் அரவிந்தனது இசை, அவனது தாய் ஊட்டிய பாலிலேயே உள்ளது. அவனது எதிர் காலம் சிறப்பாக அமையும் என நம்புகிறேன். முயற்சியை அவன் தொடர எனது அன்பான வாழ்த்துக்கள். இன்று நடைபெறுவது அரங்கேற்றம்தான். ஆனால் எதிர் காலம், அவனது திறமையை, ஆற்றலை, கற்பனை வளத்தைப் பாராட்டும், சிறந்த காலமாக மிளிர, ஒளிர, புகழ்பெற உளமார வாழ்த்துகிறேன்.

அன்புடன்
**க. இராசாராம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெற்றோரும் மகவும்

நான் பரவசமடைகிறேன்! அரவிந்தன் அரங்கேறுகிறார். அந்த எழில் வதனம், கள்ளம் கபடமற்ற சுந்தர வதனம். பதின்வயதினருக்கே **(teenagers)** பொதுவாக ஏற்படக்கூடிய மனமுரண்பாடு எதுவும் இல்லாமல் சீரான வளர்ச்சிக்கான அமைதியான யௌவனத் தோற்றத்துடன் அவர் என் கண்முன்னே நிற்கிறார்.

தொப்பூழ் கொடி இணைப்பு இருக்கவில்லை. ஆனால், பகீரதனும் மலர்விழியும் பாசப் பிணைப்பினால் எனது அன்புச் செல்வங்கள். அவர்கள் குழந்தை அரவிந்தன் ஒன்றல்ல இரண்டு கலைகளைச் சேவையுடன் கற்று இன்று அரங்கேறுகிறான். 'கவின்கலை' நிறுவனர் திரு பி. ஞானவரதன் அவர்களிடம் புல்லாங்குழலையும், 'ஆவர்த்தனாஸ்' இயக்குனர் திரு. ப. கிருபாகரனிடம் மிருதங்கத்தையும் ஏழு வருடங்கள் உண்மையான குரு சிஷ்ய தன்மையில் அரவிந்தன் கற்றமையால்தான் இன்று அற்புத திறமையுடன் அரங்கேறும் தகுதி பெற்றுள்ளார் என்பது பெருமைக்குரியது. தோற்கருவி, துளைக்கருவி என இரண்டு வேறான இசைக் கருவிகளிலே ஒரே சமயத்தில் பாண்டித்தியம் பெறுவது என்பது சாதாரண விஷயமல்ல. திறன் இருந்தால் மட்டும் போதாது. அர்ப்பணிப்பும் தேவை. போதிய நேரம் ஒதுக்க வேண்டும். குரு சொல்லித் தருவதை வீட்டில் சாதகம் செய்து பார்க்காவிட்டால் கலை வளராது தேங்கி நிற்கும்.

'தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு' (குறள் 396) என்கிறார் வள்ளுவர்.

தோண்டத் தோண்டத்தான் ஊற்றிலே நீர் கிடைப்பது போல. தொடர்ந்து சாதகம் செய்யச் செய்யவே அறிவுத் திறன் பெருகிக் கொண்டு போகும் எனப் பொருள் கொள்ளலாம் தானே.

இன்றைய கல்வி முறையில் பாடசாலைக் கல்வி, இப்போ வாழ்வா? சாவா? என்ற நிலையில் மிகவும் போட்டிக்குரிய ஒன்றாக அமைந்துள்ள நேரத்தில் இவ்விரு வாத்தியக் கலைகள் தவிர, சற்றும் கலங்காமல் பியானோ, தபேலா, டிறம்ஸ் போன்ற ஏனைய வாத்தியக் கருவிகளையும் திறம்படக் பயில்கின்றார் அரவிந்தன். இவற்றுடன் நின்று விடவில்லை. தனக்கு இவ்வாத்தியங்களில் உள்ள புலமையை **Croydon Music Festival** போன்ற மிக்க பிரபலமான தரமிக்க நிகழ்ச்சிகளில் நிருபித்துப் பல பரிசில்களைத் தட்டிச் சென்றதோடல்லாமல், தன் கலை ஆற்றலை மற்றையோரும் கண்டு களிக்க வேண்டும் என்ற பெரு வேட்கையிலே பல இந்திய பல்லியக் குழுக்களிலே **(Orchestra)** பங்காற்றுதல் மூலம் உணர்த்தியும் உள்ளார்.

**Sutton Grammar School** இல் 10ஆம் தரத்தில் கல்வி கற்கும் அரவிந்தன் படிப்பிலும் மிக முன்னணியில் நிற்கும் முதல்தர மாணவன். கிங்ஸ்ரன் தமிழ் பாடசாலையில் தமிழும் கற்கிறார். சிறந்த மாணாக்கராகத் திகழ்கிறார். இவ்விதம் எங்கேயும் பரிணமிப்பது எளிதில் சாத்தியமா? அதற்காக அவனது அர்ப்பணிப்பையும், நேரச் செயலாட்சி திறனையும் **(Time management)** பாராட்டுவதா? அல்லது அவனுக்கு ஆக்கபூர்வ ஒத்துழைப்புடன் செயலூக்கம் மிக்க சூழலுக்குக் காரணமாக அமைந்த பெற்றோர்களைப் போற்றுவதா?

இயற்கையான புத்திக் கூர்மை பரம்பரைபரம்பரையாக வருவது. அது அரவிந்தனுக்கு மிக நிறையவே உள்ளது. அதனை விருத்தி செய்வதற்கு வேண்டிய செயலூக்கமான சூழலைத் தருவதும் (**Motivating environment)** பிள்ளையின் தனித்துவமான திறன்களைக் கண்டு அதற்கேற்றவாறு அவரை வழி நடத்துதலும் பெற்றோரியத்தின் **(Parenting)** பிரதான பணி. இதனையே ஊட்டம் **(Nurture)** என உயிரியலாளரும் உணர்வுசார் புத்திக் கூர்மை **(Emotional intelligence)** எனக் கல்வி உளவியலாளரும் சொல்கின்றனர். பகீரதனும் மலர் விழியும் மிவும் துரித கதியில் இயங்கும், கடமை உணர்வுடன் கூடிய கண்ணியம் மிக்க மருத்துவர்கள். அவர்கள் தமது மகனின் உள்ளார்ந்த ஆற்றல் கண்டு அதனை விருத்தி செய்ய, அரவிந்தன் எவ்வளவு சக்தியையும் நேரத்தையும் செலவிட்டானோ அதே அளவு அவர்களும் செலவிட்டுள்ளார்கள் என்பது மிகையான கூற்று அல்ல.

அரவிந்தனுக்கும் அவன் பெற்றோர்கள் பகீரதன், மலர்விழிக்கும், திரு ஞானவரதன், திரு.கிருபாகரன் ஆகியோருக்கும் எனது நல்வாழ்த்துக்கள்.

எனது வாழ்வில் நான் கண்ட ஒரேயொரு தலைவரின் வாழ்த்தும் அரவிந்தனுக்கு எப்பொழுதும் சொரிந்த படியே இருக்கும்.

**பொ. கனகசபாபதி**
(முன்னாள் அதிபர். மகாஜன கல்லூரி)
கனடா

Aravindhan Baheerathan



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Sangeetha kalanidhi
Isai Peraringyar
**Dr. N. RAMANI**

Chennai - 600 004



திருநிறைச் செல்வன் அரவிந்தன் அவர்களது
வேய்ங்குழல், மிருதங்க அரங்கேற்றம் 9.10.2004
சனிக்கிழமையன்று நிகழும் செய்தி கேட்டு
மிகவும் மகிழ்ச்சி அடைகிறோம். இளம் வயதில் கல்வியிலும்
கலைகளிலும் தேர்ச்சிபெற்று சிறப்புடன் மேடை ஏறும்
செல்வன் அரவிந்தனுக்கு என்னுடைய
மனம் கனிந்த நல் வாழ்த்துக்கள்.
செல்வன் அரவிந்தன் இசை உலகில்
மேலும் மேலும் தேர்ச்சி பெற்று, நலங்களுடன் நீடுழி வாழ
எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறேன்.

ஆசிரியர், வேணுகானமணி திரு ஞானவரதன் அவர்களுக்கும்,
ஆசிரியர், திரு கிருபாகரன் அவர்களுக்கும்
எனது மனமார்ந்த நல் வாழ்த்துக்கள்.
திரு பகீரதன் குடும்பத்தினருக்கு எனது நன்றி.
அரங்கேற்ற விழா சிறப்புற நடைபெற
எனது இனிய வாழ்த்துக்கள்.

தங்கள் அன்புள்ள

**ந. இரமணி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Guru Kaaraikkudi Mani
Chennai



ஸ்ரீ அரவிந்தன் பகீரதனின் அரங்கேற்றம் அக்டோபர் 2004ல் லண்டனில் நடைபெறுவது பற்றி மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.
நல்ல பெற்றோர், திறமையான குரு,
ஆர்வமும் உழைப்பும் மிக்க மாணவர் ஒன்று சேர்ந்து செய்யும் இந் நிகழ்ச்சி மிகவும் சிறப்பாக அமையும் என்பதில் எந்த ஐயமும் இல்லை.

கற்றோம், பெற்றோம், குருவின் அருளால் இச்செல்வம் (மிருதங்கக்கலை) திக்கெட்டும், எட்டட்டும், கேட்கட்டும் என்பது அடியேனின் அவா.
ஸ்ருதிலய கேந்திராவின் காப்பாளரான ஸ்ரீ கிருபாகரனின் தயாரிப்பில் சிறப்பாக வாசிக்கும் ஸ்ரீ அரவிந்தன், ஸ்ரீமதி காயத்ரி கிரிஷின் பாட்டோடு மேலும் பரிமளிக்கும்.

பெற்றோருக்கு என் பாராட்டுகள். ஸ்ரீ அரவிந்தன் இக்கலையில் மேன் மேலும் உயர்வடைய ஸ்ரீசாயிநாதனையும், ஸ்ரீ குரு சுராஜானந்தரையும் ப்ரார்த்தித்துக் கொள்கிறேன்.

நலம், நல்லதாகும்.

**குரு காரைக்குடி மணி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## BLESSINGS FROM THE GURU

**Sri.Paramasamy Kirupakaran**

It gives me great pleasure in writing this message on the occasion of the Mridanga and Flute Arangetram of my Mridanga disciple Master Aravindhan.

Aravindhan has been under my tutelage for the past six years. He is a sincere, dedicated and a hardworking student. His keen ability to grasp the essence of these arts with dedication has inspired me to teach him more advanced lessons (Korvais) with intricacies, which I hope you will witness tonight

I have also been extremely impressed by his devotion towards the GURU. Aravindhan has also found time to contribute towards Flute, Western Drum and Tabla despite being busy with his academic studies. Aravindhan, under my guidance has participated in Croydon Music Festival and won prizes.

I sincerely appreciate his involvement in our cultural, social and religious activities in a western society. Owning one's cultural heritage is crucially important in today' s world and it is truly gratifying to see how Aravindhan has wholly integrated into the society of this country, whilst at the same time, sustaining and developing our own Cultural identity.
I am confident that Aravindhan will impress the audience by having two Arangetrams tonight and I wish him my very best for successful Arangetrams

**May the Almighty shower the choicest blessings on his maiden performances.**

**P. Kirupakaran**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குருவின் ஆசிச் செய்தி

### பிச்சையப்பா ஞானவரதன்

உயர்ந்த இலட்சியங்களும், உயர்ந்த பண்புகளும், தியாகங்களும் நிறைந்த பரம்பரையின் வாரிசாக வந்தவர் செல்வன் அரவிந்தன்; அவற்றிலின்று சற்றும் வழுவாத பண்புடையவர்.

இத்தகைய இயல்புடைய மாணவனுக்கு கலைஞானம் சொல்லிக் கொடுத்து வருவதில்லை. அது தானாகவே வரும். அந்த வகையில் மிக நுணுக்கமான சங்கதிகளையும் அசைவுகளையும் இலகுவாகப் புரிந்தும், விடா முயற்சியுடன் சாதகம் செய்து கைவரப்பெறும் சாணக்கியத் தன்மையும் மிகுந்தவர். அத்துடன் அவர் மிருதங்கம், Drums ஆகிய தாள வாத்தியங்களிலும் சிறப்புற்றுள்ளார். இவர் லய ஞானத்திலும் சளைத்தவரல்ல என்பதை இன்றைய மிருதங்க அரங்கேற்றம் சான்று பகரும். அரவிந்தன் மென்மேலும் இக் கலைகளின் நுணுக்கங்களை கற்று உயர இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

"அக்கினிக் குஞ்சொன்று கண்டேன் - அதை
அங்கொரு காட்டிலோர் பொந்திடை வைத்தேன்;
வெந்து தணிந்தது காடு, தழல்
வீரத்தில் குஞ்சென்றும் மூப்பென்றும் உண்டோ?

என்னை இந்த உலகத்திற்கு அறிமுகப்படுத்தியவரும், எனது குருவும், வழிகாட்டியுமாகிய எனது தந்தை அமரர் பிச்சையப்பா அவர்களின் பாதங்களில் இந்த அரங்கேற்றத்தை சமர்ப்பிக்கின்றேன்.

**ஞானவரதன்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# GURU

## Sri Paramasamy Kirupakaran



Sri Paramasamy Kirupakaran hails from a family of musicians. He began his tutelage under Sri M Sithamparnathan and Sri S Mahendran at Annamalai Esai Thamil Manram, Nallur, Jaffna, Srilanka. Sri Kirupakaran obtained the Teacher's Grade in 1982. He is also a vocalist. He learnt Vocal under His father , later he continued with *Sangethe Bushanam* Mr S Balashingam, and *Sangetha Bushanam* Mr S Pathmalingam in SriLanka

He excelled academically and obtained a Bachelor of Commerce and continued with his studies whilst in Norway where he qualified with further degree in Business Administration. Sri Kirupakaran has participated in Rupawahini, National TV of Srilanka, Norway television, BBC and Greater London Radio.

Mridanga Maestro Guru Karaikudi R .Mani, has trained Sri Kirupakaran further in the intricate and sympathetic techniques of playing Mrrdangam . His teaching style and skill are greatly appreciated by Tamil Community in London. His teaching skill has been witnessed by number of talented children Who have been winning several awards in talent competition all over London every year.

Sri Kirupakaran has accompanied several well-known musicians, including T.K Govindarao, Rajkumar Barathy, Charumathy Ramachandran and Nithyashree Mahadevan. His performance, both as soloist and as accompanying artiste, in France, Norway, Sweden and Denmark has earned him noteworthy reviews.

Sri P.Kirupakaran had also participated in the Winter Music Festival in Chennai '03, 0rganised by SHRUTHI LAYA KENDRA of Mridhanga Majestro Guru Karaikudi Mani

Sri P Kirupakaran is conducting an annual event "AVARTHANAS" in London. A number of talented children take part every year, and he is currently teaching Mridangam in London Tamil Centre, Kingston Tamil School and Wandsworh Tamil Centre.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# GURU
## Sri Pitchaiappa Gnanavarathan



Sri Pitchaiappa Gnanavarathan hails from a family of renounced musicians in Sri Lanka. He is the son and disciple of Kalasoori TV Pitchaiappa from whom he learnt vocal music and violin. He learnt flute from his father and sangeetha vidwan N.Somasundaram. Sri Gnanavarathan obtained the *"Sangeetha Kalavithahar"* from the oriental music society, Sri Lanka. The Muththukrishnan Swami Mission awarded him the title Venuganamani in 1992. He has been a popular radio and television artist in Sri Lanka. He has given numerous performances both as a soloist and as accompanying artist in Sri Lanka, UK and many other European countries.

He has also done various CD's and recently released classical album 'Venugananjali', semi classical 'Touch of Wind volume 2' and fusion album 'Bamboo Dreams'. Well respected for his in depth knowledge and creative ability, he is now the leading flutist in the UK. Gnani master as he is popularly known and loved by his students, teaches at London Tamil School and Kingston Tamil School. He conducts Violin, Vocal and Flute classes. At his own school "Kavin Kalai". Nine students have mastered and performed their arangetram successfully and today is the tenth one.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# REPERTOIRE

1. தினராகமாலிகா வர்ணம் ஆதி தாளம் (பி. சாம்பமூர்த்தி)
Thinaragamalika varnam Adi Talam (P Sambamurthy)

2 "கம் கணபதே..." ஹம்சத்வனி - ரூபகம் (முத்தையா பாகவதர்)
"Gam Ganapathe..." Hamsadhwani - Rupakam (Muthiah Bhagavatar)

3. பஞ்சரத்தினம் - "எந்தரோ மஹானுபாவுலு..." ஸ்ரீராகம் - ஆதி (தியாகராஜர்)
Pancharatnam "Endaro Mahanubhavulu..." Sree Ragam - Adi (Tyagaraja)

4. "கணபதியே நிதம்..." அம்ருதவர்ஷிணி - ஆதி (ரி. வி. பிச்சையப்பா)
"Ganapathiye nitham..." Amruthavarshini - Adi (T V Pitchayappa)

5. "மநவியால கிஞ்சரா..." நளினகாந்தி - ஆதி (தியாகராஜர்)
"Manavyala kinchara..." Nalinakanti - Adi (Tyagaraja)

6. ராகம் தானம் பல்லவி ஷண்முகப்பிரியா - ஆதி 2 களை (காரைக்குடி கிருஷ்ணமூர்த்தி)
Ragam Tanam Pallavi Shanmukhapriya - Adi 2 kalai (Karaikudi R Krishnamurthy)

7. "ப்ரோசேவாரெவருரா..." கமாஸ் - ஆதி 2 களை (மைசூர் வாசுதேவாச்சாரியார்)
"Brochevarevarura..." Khamas - Adi 2 kalai (Mysore Vasudevachar)


8. "கிருஷ்ணா நீ பேகனே..." யமன் கல்யாணி - மிஸ்ரசாபு (வியாசராயர்)
"Krishna nee begane..." Yaman Kalyani - Misrachapu (Vyasarayar)

9. "முருகனின் மறுபெயர்..." பெஹாக் - கண்டசாபு (சுரஜானந்தர்)
"Muruganin marupeyar..." Behag - Khandachapu (Surajananda)

10. "சுட்டும் விழிச்சுடர்..." கர்நாடக தேவகாந்தாரி - ஆதி திஸ்ரநடை (சுப்பிரமணிய பாரதியார்)
"Chuddum vizhi chudar.." Karnataka Devagandhari - Adi thisra nadai (Subramania Bharati)

11. தில்லானா மத்தியமாவதி - ஆதி (டாக்டர் என். ரமணி)
Tillana Madhyamavathi - Adi (Dr N Ramani)

12. மீரா பஜன் சிவரஞ்சனி - ஆதி
Meera Bhajan Sivaranjani - Adi



## INTERMISSION



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. வர்ணம் - "சாமி நின்னே..." ஸ்ரீராகம் - ஆதி (கரூர் தேவுடு ஐயர்)
Varnam - "Sami ninne..." Sree Ragam - Adi (Karur Devudu Iyer)

2. "கணபதி தாளே..." நாட்டை - ஆதி (சுப்பிரமணிய பாரதியார்)
"Ganapathy thale..." Nattai - Adi (Subramania Bharati)

3. "துளஸீ தளமுலசே..." மாயாமாளவகௌளை - ரூபகம் (தியாகராஜர்)
"Tulasee dalamulache..." Mayamalavagoula - Rupakam (Tyagaraja)

4. "கற்பக மனோஹரா..." மலையமாருதம் - கண்டசாபு (பாபநாசம் சிவன்)
"Katpaka manohara..." Malayamarudham - Khandachapu (Papanasam Sivan)

5. "சலமேலரா..." மார்கஹிந்தோளம் - ஆதி (தியாகராஜர்)
"Salamelara..." Markahindolam - Adi (Tyagaraja)

6. "கா வா வா..." வரலி, ஆதி (பாபநாசம் சிவன்)
"Ka va va..." Varali, Adi (Papanasam Sivan)

7. "பாரோ கிருஷ்ணையா..." ராகமாளிகை - ஆதி (கனகதாசர்)
"Baro Krishnayya..." Ragamalika - Adi (Kanakadasa)

8. "சந்திரன் ஒளியில்..." சந்திரகௌன்ஸ் - மிஸ்ரசாபு (சுப்பிரமணிய பாரதியார்)
"Chandran oliyil..." Chandragowns - Misrachapu (Subramania Bharati)

9. "நெஞ்சில் உரமுமின்றி..." ராகமாளிகை - ஆதி (சுப்பிரமணிய பாரதியார்)
"Nenchil Uramumintri..." Ragamalika - Adi (Subramania Bharati)

10. சாயி பஜன் பெஹாக் - ஆதி
Sai Bhajan Behag - Adi

11. தில்லானா நிரோஷ்டா - ஆதி (ரி. என். சேஷகோபாலன்)
Tillana Niroshda - Adi (T N Seshagopalan)

12. திருப்புகழ்
Thirupugazh

13. மங்களம்
Mangalam

**Compere :**
**Dr Kandiah Sivakumar**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

EDWARD DAVEY MP

HOUSE OF COMMONS

LONDON SW1A 0AA

Dr's. Baheerathan
58 Seymour Avenue
East Ewell
Surrey KT17 2RR

28th August 2004

Dear Dr's. Baheerathan,

It was an honour to be invited as a distinguished guest to the Flute and Mridangam Arangetram of your son Aravindhan. I am very pleased to accept your kind invitation.

I had the pleasure of learning about the cultural tradition and educational role of Arangetrams from Kingston Tamil community. I have been impressed by the meticulous training and high standards required from students to be proficient enough to be presented on stage in a solo graduation performance in front of a large audience. I have seen Aravindhan's performance and his sustained improvement over the years at the New Year and Anniversary Celebrations of Kingston Tamil School. Aravindhan must have worked extremely hard to be ready to take his Arangetram and I wish him well in his final preparations.

I am impressed to see how our local Tamil community is maintaining the Tamil culture and how the younger generation is taking part in this and setting high standards. The excellent work at Kingston Tamil School is a particularly fine example of this.

Congratulations to both Gurus Mr.P.Kirupakaran and Mr.P.Gnanavarathan, whose meticulous trainings, I have witnessed and enjoyed at Kingston Tamil School.

It is important that all sections of the community retain their culture whilst integrating fully in the local community, as our local Tamil community have done so well.

With my very best wishes



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SUTTON GRAMMAR SCHOOL
## FOR BOYS

KEEP FAITH

Headmaster: G. D. Ironside, MA (Cantab.), C. Math., PIMA

Manor Lane,
Sutton,
Surrey,
SM1 4AS

Tel : 020 8642 3821
Fax : 020 8661 4500
Email : sgs@suttonlea.org


Aravindhan has played a keen and active part in his Year 10 form group since the beginning of September. He is an enthusiastic and well-motivated student who has good friends within the form group and participates fully in form activities and discussions. His friendly and amusing personality allows him to fit in well with the dynamic of this form, allowing him to establish very good relationships with Staff and peers. These attributes have enabled Aravindhan to be appointed as a Year 10 Prefect this year, a position of immense responsibility.

Academically Aravindhan is doing excellently. He has just finished studying his first year of GCSEs and is achieving high grades across the curriculum, with particularly good grades in Science and Maths. These good academic grades are supported by a keen interest in Music and his inclusion in many Extra Curricular Activities both in and out of School. He recently gave several amazing perfonnances of his drumming skills at the School's 'Musical Extravaganza', earning de-served praise from an enthralled audience.

Medicine is a keen area of discussion for Aravindhan, who wishes to study this subject at University. He tells me that this is a course that has always interested him, and he was keen to develop some experience of this esteemed profession during his recent Work Experience. These experiences have further motivated him in his studies and set him excellent targets for his academic work next year.

In all, Aravindhan is a polite and amusing character who learns an awful lot from the opportunities afforded to him, whilst also being a very positive influence on those around him.

Mr A D Sheppard
Head of Upper School



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிங்ஸ்ரன் தமிழ்ப் பாடசாலை
# KINGSTON TAMIL SCHOOL

Based at Tolworth Girl's School, Fullers way north, Surbiton, Surrey KT6 7LQ
Estd: 1986


## எங்கள் குடும்பம்

'நிழலின் அருமை வெயிலில் தெரியும்' என்பது தமிழ்ப் பழமொழி. நமது தமிழ்க் கலைகளைப் பொறுத்தவரை மேற்கு நாடுகள் வெய்யில் நிறைந்த பாலைவனங்களே. அதனாலேதான் இங்கு வாழும் தமிழர்களுக்கு நமது கலைகளின் அருமை, நிழலின் அருமை தெரிய ஆரம்பித்திருக்கிறது. விளைவு? இந்நாட்டில் ஆண்டுதோறும் நடந்தேறும் அரங்கேற்ற நிகழ்வுகள். அப்படியொரு நிகழ்வதுதான் இன்றைய அரங்கேற்றமும் என்றால் அது மிகையாகாது.

இன்றைய அரங்கேற்ற இளைஞரை, அரவிந்தனை, எமது கிங்ஸ்ரன் தமிழ்ப் பாடசாலையில் சில ஆண்டுகளாக நான் அவதானித்து வருகிறேன். அவருக்கு மிருதங்கம், வேய்ங்குழல் என இந்த இரு கருவிகளையும் இசைப்பதில் இருக்கும் ஆர்வம் என்னைப் பிரமிக்க வைத்திருக்கிறது. கலை மேடைகளில் ஆர்வமாக அவர் வாசிக்கும்போது கண்டும் கேட்டும் நான் களித்திருக்கிறேன்; ஊக்குவித்திருக்கிறேன். அவரின் ஆர்வத்துக்கு அணிகலனாக, அவருக்கு குருவாக இருவர் அமைந்துவிட்டார்கள். திரு கிருபாகரன், திரு ஞானவரதன் இருவருமே தமது சிஷ்யனை நல்ல முறையில் உருவாக்கியிருக்கிறார்கள். பெற்றோரும் நல்ல பக்கவாத்தியங்களாக இருந்திருக்கிறார்கள். அவர்கள் அனைவரது முயற்சியும் இன்று கனியாகி இனிவரும் பல வருடங்களுக்குப் பயனளிக்கும் என்பது எமது நம்பிக்கை.

இந்த நல்ல நாளில் தனது திறமையை, ஆர்வத்தை, முயற்சியை வெளிக்கொணரும் சிறுவன் அரவிந்தனை கிங்ஸ்ரன் தமிழ்ப் பாடசாலைக் குடும்பத்தின் சார்பிலும் எனது குடும்பத்தின் சார்பிலும் மனதாரப் பாராட்டுகிறேன்; மேலும் மேன்மையுற வாழ்த்துகிறேன்.

**க. ஜெகதீஸ்வரம்பிள்ளை**
(தலைமை ஆசிரியர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**N.Rajalingam,** M.Sc., FCMA, FCCA, MBIM, DPFM
Management Consultant
Senior Lecturer (Rtd.):
LONDON Metropolitan University (North Campus).
London N7 8DB

# தெய்வீக இசை

தான் பெறும் இன்பத்தை பிறரும் பெறவேண்டும் என்ற பெரு முயற்சியில் ஈடுபடும் என் அருமை அரவிந்தன் தன் துணிவில் நிறைவும், திளைப்பும், வெற்றியும் பெற என் இதயம் துணைசெல்கின்றது, துடிக்கின்றது.

பலமொழி பேசுவோர் மத்தியில் பொதுமொழியான தெய்வீக இசைக்கருவிகள் மூலம் யாவரது உணர்வையும், நிறைவையும், தெய்வீகப் பண்பையும் தட்டி எழுப்பி அவர்கள் கடமைக்கும், கண்ணியத்துக்கும், கருணைக்கும் தூண்டுகோலாக அமைய விழைவது அரிய, பெரிய செயல்.

இச்செயலைச் செய்வதற்கு அஞ்சாமை, ஈகை, அறிவு, ஊக்கம் ஆகிய வேந்தற்குரிய இயல்புகள் நன்கு அமைந்திருக்க வேண்டும். குழந்தைப் பருவத்திலிருந்தே இப் பண்புகளின் பிரதிபலிப்பாக அமைந்து எம்மை வியப்பிலும் மகிழ்விலும் ஆழ்த்தியவன் அரவிந்தன். இவை அவன் வாழ்வில் மேலும் மேலும் விரிவுபெற்று அறிவியல் வழியே மக்கள் எங்கு வாழ்ந்தாலும் மனநலமும், உடல்நலமும் பெற்று வாழ உதவுவோனாக வளரவேண்டும், வாழவேண்டும் என்பதே எனது வழிபாடும் வாழ்த்துக்களும். இறையடி சேர்ந்த என் மனைவியாரின் ஆசியும் அரவிந்தனுக்குத் துணை நிற்கும்.

அரவிந்தன் வாழ்க, வளர்க, வாழ்வாங்கு வாழ்க என்ற எனது இதயதாகத்துடன் அமைகின்றேன்.

**ந.இராசலிங்கம்**
(பேரன்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறப்பெல்லாம் பொலிக

எம் குலக் கொழுந்தாக வந்த பேரன் அரவிந்தனின் அரங்கேற்ற வைபவம் எம் எல்லோருக்கும் ஒரு மகிழ்ச்சியைத் தரும் நிகழ்ச்சி.

மாயக் கண்ணனின் வேணு கானத்தில் ஐந்தறிவு கொண்ட ஜீவராசிகள் கூட மயங்கி நிலை மறந்து நிற்கும். அதே போல தில்லைக் கூத்தனின் திரு நடனம் அண்ட சராசங்களையும் இயக்கி வைக்கிறது. 'கீத வாத்திய நிருத்தியான திரயம் சங்கீத முச்சதே' என்பது தியாகப் பிரம்மத்தின் வாக்கு. இசைக்கு மயங்காதார் யாருளர்?

வேய்ங்குழலின் இனிய கானத்தை திரு. பி. ஞானவரதன் அவர்கள் அரவிந்தனின் ஆற்றலில் மிளிர்ந்து ஒலிக்க வைக்கிறார். அதேபோல திரு. கிருபாகரன் அவர்கள் ஸ்ருதி லயம் குறையாத வித்துவத்தை அரவிந்தனின் அழகான விரல்களால் மிருதங்கத்தில் கொட்டி விளையாட வைக்கிறார். எல்லாவற்றிற்கும் மேலாக அரவிந்தனின் விடா முயற்சி திருவினையாகி விளைந்துள்ளது. அரவிந்தனின் இசை அறிவுப் பசிக்கு தீனி போட அவரைப் பெற்ற பாக்கியசாலிகள் முன்னின்று உதவுகிறார்கள்.

இந்த அரங்கேற்றம் எமது தாய் மண்ணில் நடக்கவில்லையே என்ற ஆதங்கம் ஒரு புறமிருந்தாலும் நம் மக்கள் தானே இங்கும் வாழ்த்துக் கூறி சபையை அலங்கரிக்கிறார்கள் என்பது மகிழ்ச்சியைத் தருகின்றது. தனது பெயர் சொல்ல வந்த அரவிந்தனின் அரங்கேற்ற நிகழ்வைக் காண என் கணவர் இங்கில்லையே என்ற நினைவு எம்மை வாட்டினாலும் கூட அவரது ஆசி அரவிந்தனுக்கு என்றும் இருக்கும்.

எம் கண்மணி அரவிந்தன் நீண்ட ஆயுளும், நிறைவான கல்விச் செல்வமும் பெற்றுயர வெற்றித் திருமகள் பூரண அருளைப் பொழியட்டும். 'இவன் தந்தை என்நோற்றான் கொல்' என்ற வள்ளுவன் குறளை மெய்யாக்கி 'ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் அன்னையும்' மகிழ எம் செல்வம் பெருமை கொள்ள வைக்கிறார். என் பேரன் சிறப்பெல்லாம் பொலிய நீடு வாழ எம் குலதெய்வம் விக்ன விநாயகனை வணங்கி வேண்டுகிறேன். வாழ்க. வளர்க நீடூழி.

**திருமதி. ம. அமிர்தலிங்கம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Artistes of the evening vocal

### Gayathri Girish

Gayathri Girish is one of the popular young musicians in the field of Carnatic Music. A disciple of Maestro Sri. Madurai T.N.Seshagopalan, Gayathri has given concerts in all major Sabhas in Chennai and has travelled widely throughout India. She has also performed in the United States, Singapore, Malaysia, Sri Lanka and so on.

Recepient of the prestigious title of "Isai Peroli" from Karthik Fine Arts, Chennai, in December 2003, the other titles to her credit include "Sahithyapriya", "Sangeetha Bhaskara", "Gaana Rathna" from the Department of Cultural Affairs, Colombo, "Yuva Kala Bharathi" , "Dr. MLV Award" instituted by CMANA, USA, "Price Award of Excellence" from the Shakespeare Millenium Club and so on.



Gayathri has several audio albums to her credit. She is an "A-grade" artiste of All India Radio, Chennai and has performed for Doordarshan and other private television channels.
Several of her interviews have been telecast on several television channels.

Gayathri's strengths lie in rich bhava laden music and clear diction. She has a wide repertoire of songs and has specialized in Kritis of composers like Harikesanallur Muthiah Bhagavathar, Uthukkadu Venkatasubbier etc.

She has also given several lecture-concerts and lecture-demonstrations on various topics in music. She holds a post graduate degree in Computer Science.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### Violin - Sri K.T.Sivaganesh

Violin for the miruthangam half is played tonight by Sri K.T. Sivaganesh who is well known violinist. He hails from a family of musicians. Having had his initial training under his father K.T. Thulasiraman, he has his further studies under guru Sri M.R Gopinath. He is a versatile soloist and accompanist. He has won numerous awards including the best violinist for 1999 award by the prestigious Madras music academy. He is a B-high grade all India radio artiste and has accompanied a number of renowned musicians in India and many foreign countries.

### Violin - Sri Durai Balasubramaniyam

Sri Durai Balasubramaniyam learnt to play the violin from his father, Mr Durai Samypillai. At the age of eight he played the violin on the stage for the first time, with his elder brother. Today he is a well known lecturer in the violin at Tamil Nadu Music College. He also performs on All India Radio and he is a well known music Director. His performances have been shaped in the countries such as Australia, South Africa and Sri Lanka. He has also played the violin with various famous singers, musicians and western musicians. He teaches violin in Kingston Tamil School.

### Gadam– Sri R. N. Prakash

Bangalore R.N Prakash is a disciple of Vidwan Krishnamoorthy of Bangalore. He is an A grade artiste with All India Radio. He has not only participated regularly in radio and television programmes but has accompanied many leading artistes such as Shri Lalgudi G Jayaraman, M.S. Kadri Gopalnath, and the late D.K. Jayaraman, to name but a mere few. He is the resident Miruthanga teacher at the London School of Carnatic Music and Kingston Tamil School.

### Tabla - Sri Atchuthan Raveendaran

Atchuthan Raveendaran is on the Tabla tonight to accompany the flute. He was an artist and popular member of the orchestra for Sri Lankan broadcasting cooperation. Currently, based in the U.K, he plays for many leading Bollywood artists. He regularly participates in programmes in the U.K and Europe. He excels mainly in percussion instruments.

### Ganjira - Balaji Krishnamurthy.

Balaji Krishnamurthy, a chartered accountant by profession is a senior mridangam student of Shri Somasundara Desigar and has received advanced guidance from Mridangam maestro Guru Kaaraikkudi R Mani. He has performed all over the UK as well in Europe. He was the first recipient of the Asian music circuit scholarship after winning Croydon Music festival in 2000. Balaji has performed with many of UK's senior artistes as well as eminent Carnatic musicians.

### Thambura - Selvi Mathurini Yogendran

Mathurini staged her Carnatic Vocal Arangetram in 2003 under the tutelage of her guru Smt Saraswathi Pakiarasa. Mathurini had the privilege of singing bhajans infront of Bhagavan Sri Sathya Sai Baba, as well as performing Bharatha Natyam in the Sai Mahima programmes. Mathurini also learns mridangam under her Guru Sri Somasundara Desigar. Her interests in music also stretch to her talent on the piano, keyboard, harmonium and guitar.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Thank You

I would like to thank and pray to God for his blessings in helping me to perform today.

Firstly, I would like to thank my two gurus who have given me so much. I have appreciated the way Kirupa master has taught me with great encouragement, dedication and enthusiasm over the past seven years. He has imparted his great knowledge upon me without ever holding back and helped me to love the art. I express my sincere gratitude and I am in great debt to him..

Gnani Master, too, has taught me with great enthusiasm, dedication and encouragement. He has given me tremendous support and guidance over the past seven years and has helped me to love the art, he too, has never held back his tremendous knowledge. I express my utmost gratitude to him and I owe him so much. I am grateful to have two outstanding gurus. I would like to take this opportunity to thank my first mridangam teacher Sirthamparanathan master.

I am also grateful to Guru Karikudi Mani Sir for his blessings during his visit to England and the message he has given and the mridangam he has given for today's performance. My gratitude also goes to Dr Ramani Sir and his wife for their blessing and selecting flutes for this occasion.

I would also like to thank Thama aunty for treating me like a member of the family when I went and stayed there for flute lessons. I also thank Barathy Aunty for the kindness she has shown over the past few years.

There are no words strong enough to thank my caring and loving parents for all their support, encour agement and the effort which has made this occasion possible. I would also like to thank my ammapa, appama and the rest of my family for the great support they have given me, and although they are not here today- I am sure my appapa and ammama are watching from above and I have there blessings too.

My humble thanks also goes to Mrs Gaythri Ghirish, who has come all the way from India to sing today- especially on her birthday. I am privileged to have an artist of such great caliber singing today. I would like to take this opportunity to thank the other outstanding accompaniments, Durai Balasubramanium Sir, Sivaganesh Sir, Balaji Anna, Prakash Master, Ravi Sir and Mathurini for their time and effort. They have been very supportive to me.

I also express my gratitude to Kothandapani master for his continued support and the various concert opportunities he has provided me with both, playing solos and in his Orchestra.

I would like to thank Ilankovan uncle for helping me on the mridangam before I began taking lessons from Kirupa master and for his continual support and the concert opportunities he has provided me with.

I would also like to thank the rest of the KITC teachers for giving me concert opportunities and their continuous support.

I would also like to thank Mr Dharambir Singh and Mr Alok Nayak for the concert opportunities and support in Samyo (South Asian Music Youth Orchestra).

I would also like to thank chief guest Mrs. Saraswathy Packiarasa for her precsious time and presence today. I would also like to thank guest of honour and our family well wisher Kanagasabapathy master for coming all the way from Canada today and his message. I would also like to thank special guest Edward Davey Hon'ble M. P. for Surbiton for his precious time and presence today.

My sincere gratitude also goes to Dr. Sivakumar Uncle for his excellent compering and agreeing to do so among his very many roles and commitments.

Our thanks and gratitude goes to Rajah uncle for excellent designing of the card and brochure. Thanks also go to Mali Mama for all his advice and support. Our sincere thanks and gratitude goes to Thayalan uncle for managing the stage. Our gratitude also goes to Dr. Panch. Ramalingam uncle in India for all his hard work with the brochure.

Our thanks also goes to Anbiah uncle and aunty for all their help. Our thanks also goes to Premkumar Uncle and Yogini aunty for their hospitality during Kirupa master's lessons in their house.

Our Special gratitude extends to the KITC family for giving a helping hand in every way to have this Arangetram Successful. We thank Avarthana's committee members and all the friends and family, whom without this arangetram would not be possible. We would also like to thank the Beck Theatre staff, Deepam TV for their coverage, Ajans video, and the Ruby caterers.


Finally, I would like to thank you the audience, for blessing this occasion by your presence.

Aravindhan Baheerathan



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

R. Pathmanaba Iyer
27-B, High Street,
Plaistow
London E13 0AD



Chief Guest :

**Sangitha Vidwan Saraswathy Packiarasa**

Guests of Honour :

**Mr. Edward Davey Hon M.P.**

**Mr. P. Kanagasabapathy**

Special Guest :

**Kalaimamani Thiruvarur Sri Latchappapillai**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org